Puducherry

Regional Bulletin

Tamil

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவண குமார்

தேதி : 24.02.2026 – செவ்வாய்க்கிழமை          நேரம் : மாலை 6.10 மணி

----------------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று முதல் 4 நாள் பயணமாக மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி 2 நாள் அரசுமுறை பயணமாக நாளை இஸ்ரேல் செல்கிறார்.

இந்தியத் தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையர்களின் தேசிய வட்டமேசை மாநாடு புதுடெல்லியிலுள்ள பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி மார்ச் 1ஆம் தேதி புதுச்சேரி லாஸ்பேட்டை மைதானத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்கிறார்.

*குடியரசு தலைவர் 1 (05 )*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று முதல் 4 நாள் பயணமாக மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்குப் பயணம் மேற்கொள்கிறார். இப்பயணத்தின் முதற்கட்டமாக அவர் மகாராஷ்டிரா மாநிலம் சென்றடைந்தார்.

இந்நிகழ்ச்சி குறித்த ஒரு செய்தி தொகுப்பு…

… வாய்ஸ்…

*குடியரசு தலைவர் 2 (15 )*

... வாய்ஸ்...

<u>குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மகாராஷ்டிரா மாநிலத்தின், மும்பை சத்ரபதி சிவாஜி மகராஜ் சர்வதேச விமான நிலையத்தை அடைந்தார். அங்கு அவருக்கு, அம்மாநில ஆளுநர் திரு.ஆச்சார்யா தேவ்ரத் சிறப்பான வரவேற்பளித்தார். குடியரசு தலைவர் வரவேற்பு நிகழ்ச்சியில், அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னாவிஸ், துணை முதலமைச்சர்கள் திரு.ஏக்நாத் ஷிண்டே மற்றும் திரு. சுனேத்ரா அஜித் பவார், தலைமைச் செயலாளர் திரு. ராஜேஷ் அகர்வால் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து, மும்பை, லோக் பவனில் P.D. Induja மருத்துவமனை ஏற்பாடு செய்துள்ள உயிர்களைக் காப்பாற்றுதல் மற்றும் ஆரோக்கியமான பாரதத்தை உருவாக்குதல் என்ற நாடு தழுவிய பிரச்சாரத்தை தொடக்கி வைத்தார். நாளை புல்தானாவின் Shegaon-ல் மத்திய ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள தேசிய ஆரோக்கிய கண்காட்சி-2026-ல் கலந்து கொள்ளும் திருமதி திரௌபதி முர்மு, நாக்பூரில் பிரம்ம குமாரிகள் ஏற்பாடு செய்துள்ள ஒற்றுமை மற்றும் நம்பிக்கை மூலம் மகாராஷ்டிராவின் பொற்காலம் என்ற மாநில அளவிலான தொடக்க விழாவிலும் அவர் கலந்து கொள்கிறார்.</u>

*குடியரசு தலைவர் 3 (08 )*

தொடர்ந்து ஜார்க்கண்ட் மாநிலம் ஜம்ஷெட்பூரிலுள்ள ஸ்ரீ ஜெகந்நாத் ஆன்மிக மற்றும் கலாச்சார அறக்கட்டளை ஏற்பாடு செய்துள்ள ஸ்ரீ ஜெகந்நாதர் கோவிலின் பூமி பூஜை விழாவிலும் குடியரசு தலைவர் பங்கேற்கவுள்ளார். ஜம்ஷெட்பூரிலுள்ள மணிப்பால் டாடா மருத்துவக் கல்லூரியைப் பார்வையிட்ட பின்னர், அவர் மாணவர்களுடன் கலந்துரையாடவுள்ளார். வரும் வெள்ளிக்கிழமையன்று ராஜஸ்தான் மாநிலம் பொக்ரானில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறார்.

*சி.பி.ராதாகிருஷ்ணன் – 1 (15 )*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று புதுடெல்லியில் அமெரிக்க-இந்திய கூட்டாண்மை மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுற்றுலா தலைமைத்துவ உச்சி மாநாடு 2026-ஐ தொடக்கி வைத்தார். இம்மாநாட்டில் உரையாற்றிய அவர், சுற்றுலா என்பது தொழிலாக கருதப்படாமல், கலாச்சாரங்களுக்கு இடையிலான பாலம் மற்றும் பொருளாதார வாய்ப்புகளின் ஆதாரம் என்றும் கூறினார். சுற்றுலா என்பது மென்மையான ஒரு சக்தி வாய்ந்த கருவி என்றும், இந்திய-அமெரிக்க பொருளாதாரத்தின் முக்கியத் தூண் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார். மேலும், பயணிகள் தங்கள் சுற்றுலா அனுபவங்களில், நம்பகத்தன்மை, நிலைத்தன்மை, கலாச்சாரம், பாரம்பரியம், நல்வாழ்வு ஆகியவற்றை எதிர்பார்ப்பதாக குடியரசு துணைத் தலைவர் தெரிவித்தார். சுற்றுலாத் துறை, வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும், நிலையான வளர்ச்சியை உறுதி செய்ய தொழில்முனைவோர் மற்றும் பெண்கள் தலைமையிலான நிறுவனங்களில் முதலீடு செய்வது குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

*சி.பி.ராதாகிருஷ்ணன் – 2 (10 )*

சுற்றுலாவை எளிதாக்குவதற்கும், பார்வையாளர்களின் அனுபவத்தை நெறிப்படுத்துவதற்கும் பன்மொழி டிஜிட்டல் வழிகாட்டிகள் மற்றும் மேலாண்மை போன்ற செயற்கை நுண்ணறிவு சார்ந்த தீர்வுகளை ஒருங்கிணைக்க அவர் அழைப்பு விடுத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், கலாச்சாரத்தின் கொண்டாட்டங்களாக சுற்றுலா திகழ்கிறது என்றும், நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்குச் சுற்றுலா முக்கியப் பங்காற்றுவதாகவும் கூறினார்.

மோடி (17)

பிரதமர் திரு. நரேந்திர மோடி 2 நாள் அரசுமுறை பயணமாக நாளை இஸ்ரேல் செல்கிறார். இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவை TEL AVIV நகரில் சந்தித்த பின்னர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஜெருசலம் செல்கிறார். பிரதமர் திரு, நரேந்திர மோடியின் இஸ்ரேல் பயணம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று இஸ்ரேலுக்கான இந்தியத் தூதர் திரு. J.P. Singh தெரிவித்துள்ளார். ஜெருசலமில் ஆகாஷ்வாணி செய்தியாளர்களிடம் பேசிய திரு. சிங், இந்தியாவும் இஸ்ரேலும் பயங்கரவாதத்திற்கு எதிராக ஒன்றிணைந்து செயல்படுகின்றன என்று கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இஸ்ரேல் பயணத்தின் போது இருநாட்டுத் தலைவர்களும் பேச்சுவார்த்தை மேற்கொண்ட பின்னர், பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதுமை அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, சைபர் பாதுகாப்பு, குவாண்டம் உள்ளிட்ட துறைகளில் பேச்சு வார்த்தை நடைபெறவுள்ளதாக இந்தியத் தூதர் தெரிவித்தார். பிரதமர் திரு. நரேந்திர மோடி இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார் என்றும், தொடர்ந்து அங்குள்ள இந்திய வம்சாவளியினருடன் அவர் கலந்துரையாடுவார் என்றும் திரு. J.P. Singh தெரிவித்துள்ளார்.

மோடி (17)

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் முதல் இந்தியத் தலைவர் திரு. நரேந்திரமோடி என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து, அங்கு நடைபெறும் தொழில்நுட்பக் கண்காட்சியில் பிரதமர் பங்கேற்கவுள்ளார். வரும் வியாழன் அன்று Holocaust நினைவுச் சின்னமான Yad Vashem-க்கு திரு. மோடி செல்கிறார். பின்னர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, இஸ்ரேல் அதிபர் திரு. Isaac Herzog-ஐ சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

*ஞானேஷ்குமார் 1 (04 )*

இந்தியத் தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையர்களின் தேசிய வட்டமேசை மாநாடு புதுடெல்லியிலுள்ள பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி குறித்த ஒரு செய்தி தொகுப்பு…

… வாய்ஸ்…

*ஞானேஷ்குமார் 2 (18 )*

…வாய்ஸ்…

27 ஆண்டுகளுக்குப் பின் நடைபெறும் இந்த வட்டமேசை மாநாட்டிற்கு தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமார் தலைமை தாங்கினார். தேர்தல் ஆணையர்கள் டாக்டர் சுக்பீர் சிங் சந்து மற்றும் டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோர் முன்னிலையில் இந்த வட்டமேசை மாநாடு நடைபெற்றது. அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் மாநில தேர்தல் ஆணையர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர். தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையர்களின் செயல்பாட்டில் ஒருங்கிணைப்பை வளர்ப்பதே இந்த வட்டமேசை மாநாட்டின் நோக்கம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இம்மாநாட்டில் ஆக்கப்பூர்வமான கருத்துப் பரிமாற்றங்கள், தேர்தல் நிர்வாகத்தில் கூட்டுறவு உணர்வை வலுப்படுத்துவது குறித்து விவாதங்கள் நடைபெற்றன. இந்த ஒருநாள் மாநாட்டின் போது தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துதல், தொழில்நுட்பம், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் பட்டியல்களைப் பகிர்வது குறித்தும் ஆராய்ப்பட்டது. அண்மையில் தொடங்கப்பட்ட ECINET டிஜிட்டல் தளம் மற்றும் தொழில்நுட்ப செயல்பாடுகள் குறித்து மூத்த அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

*ஞானேஷ்குமார் 3 (03 )*

…வாய்ஸ்…

மேலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல் திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பாதுகாப்பு குறித்து விளக்க காட்சிகள் இம்மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்டன.

*ஞானேஷ்குமார் 4 (07 )*

இதனிடையே தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ள திரு. ஞானேஷ்குமார் தலைமையிலான தேர்தல் குழுவினர் நாளை சென்னைக்கு வருகின்றனர். வரும் 26, 27ஆம் தேதிகளில் சென்னையில் அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், அரசியல் கட்சித் தலைவர்களுடன் இக்குழுவினர் ஆலோசனை மேற்கொள்ளவுள்ளனர். முன்னதாக, புதுச்சேரியில் தேர்தல் நடைமுறைகள் குறித்து இக்குழு ஆய்வு மேற்கொள்கிறது.

*ஜெயலலிதா 1 (18 )*

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை, காமராஜர் சாலையிலுள்ள ஜெயலலிதாவின் திருவுருவப் படத்திற்கு மாநில அரசின் சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஜெயலலிதா ஒரு சிறந்த தலைவராகவும், நிர்வாகியாகவும், எண்ணற்ற மக்களின் இதயங்களில் இடம்பிடித்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார். பெண்களுக்கு அதிகாரமளித்தல், சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்திய ஜெயலலிதா, கருணை மற்றும் உறுதி மிக்கவராகவும் திகழ்ந்தவர் என்று பிரதமர் புகழாரம் சூட்டினார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள பதிவில், ஜெயலலிதாவின் அர்ப்பணிப்பு, தமிழ்நாட்டின் வளர்ச்சியை மறுவடிவமைத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஜெயலலிதா தம்மை அர்ப்பணித்துக் கொண்டதாகவும்,

பெண்கள் நலன், கல்வி மற்றும் சமூக நீதி ஆகியவற்றில் அவரது முயற்சி பாராட்டத்தக்கது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*ஜெயலலிதா 2 (07 )*

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு புதுச்சேரி அரசு சார்பில் இன்று குபேர் சாலையில் உள்ள மேரி கட்டட அரங்கில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.எஸ்.பி. ரமேஷ், திரு.பாஸ்கர், மற்றும் பலர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

*புதுச்சேரி மோடி (07 )*

பிரதமர் திரு. நரேந்திர மோடி மார்ச் 1ஆம் தேதி புதுச்சேரி லாஸ்பேட்டை மைதானத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்கிறார். இதனை முன்னிட்டு D.I.G. திரு. சத்தியசுந்தரம், விழா நடைபெறவுள்ள இடத்தை ஆய்வு செய்தார். தொடர்ந்து முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு. கலைவாணன் மற்றும் கண்காணிப்பாளர்களுடன் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

*காரைக்கால் - வாக்குச்சாவடி (14 )*

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணை மற்றும் புதுச்சேரி தலைமை தேர்தல் அதிகாரியின் அறிவுறுத்தலின்படி, காரைக்கால் மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளின் மறுசீரமைப்பு குறித்த கருத்து கேட்புக் கூட்டம் இன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான திருமதி இஷிதா ராட்டி, தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். வாக்குச்சாவடிகளில் செய்யப்பட வேண்டிய பெயர் மாற்றங்கள் மற்றும்

கட்டிட இடர்பாடுகள் உள்ள வாக்குச்சாவடிகளை இடமாற்றம் செய்வது தொடர்பான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டு, அவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சார்பு ஆட்சியர் செல்வி பூஜா, தேர்தல் அதிகாரிகள் திரு. அருணகிரிநாதன், திரு. செந்தில்நாதன் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் உட்பட பலர் பங்கேற்று அரசியல் கட்சியினரின் கருத்துகளைக் கேட்டறிந்தனர்.

*காரைக்கால் -மின்துறை (11 )*

புதுச்சேரி மின்துறையின் நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம் சார்பில் காரைக்கால் பகுதி மின் நுகர்வோருக்கான குறைதீர்ப்பு முகாம் நாளை நடைபெறவுள்ளது. இந்த முகாம் காரைக்கால் மின்துறை தலைமை அலுவலகத்தில் காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறவுள்ளது. மின்நுகர்வோர்கள் தங்கள் மின் சேவை தொடர்பான குறைகள், கூடுதல் மின்சுமை, புதிய இணைப்பு அல்லது மின் கட்டண புகார்கள் போன்ற பிரச்சனைகள் குறித்த மன்ற தலைவரிடம் எழுத்துப்பூர்வமாக புகாரளித்து தீர்வுகளைப் பெறலாம் என்று காரைக்கால் மின்துறை செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார். காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மின்நுகர்வோர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு மின்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

*வானிலை (08 )*

அந்தமான் மற்றும் நிக்கோபர் பகுதிகளில் நாளை வரை இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது. மேற்குவங்கம், ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசாவிலும் மழை பெய்யும் என்றும், அருணாச்சல பிரதேசம், மேகாலயா, சிக்கிம், சத்தீஷ்கர், தெலங்கானா, தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளா மாஹே மற்றும் லட்சத்தீவுகளில் இன்றுஇடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

சிங்கப்பூர் சர்வதேச சேலஞ்ச் பேட்மின்டன் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் நிரஞ்சன் நந்தகுமார், ரூபன் ரத்னசபாபதி இணை 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது. ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-13, 22-20 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் TITIPHAT-SITTSAK இணையை வென்றது.

துபாய் டென்னிஸ் சாம்பியன் பட்டப் போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ஆஸ்திரியாவின் நீல் இணை--இத்தாலி இணையை இன்று எதிர்கொள்கிறது. மற்றொரு ஆட்டத்தில் யூகி பாம்ப்ரி--ஸ்வீடனின் ஆன்ட்ரூ இணை களம் காண்கின்றன.

பிரிஸ்பேனில் இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 38.2 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 217 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று முதல் 4 நாள் பயணமாக மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி 2 நாள் அரசுமுறை பயணமாக நாளை இஸ்ரேல் செல்கிறார்.

இந்தியத் தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையர்களின் தேசிய வட்டமேசை மாநாடு புதுடெல்லியிலுள்ள பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி மார்ச் 1ஆம் தேதி புதுச்சேரி லாஸ்பேட்டை மைதானத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்கிறார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது AV/MSVM

*நித்தி ஆயோக் (14 )*

நாட்டில் வரும் 5 முதல் 10 ஆண்டுகளில் மத்திய அரசின் தேசிய நிதி மய திட்டத்தின் 2ஆவது கட்டப் பணிகள், 40 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு உள்நாட்டு பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி தற்போதுள்ள பொது சொத்துக்களை புதிய கட்டமைப்பு திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் கட்டமைப்புத்துறையும், பொருளாதாரமும் வளர்ச்சி பெறும் என்றும் நிதி ஆயோக் கூறியுள்ளது. நடப்பு நிதியாண்டு முதல் 2030ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்படும் சொத்துக்களை நிதிமயமாக்கும் மத்திய அரசின் 2ஆவது கட்ட திட்டத்தின் கீழ் 40 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் கிடைக்கப்பெறும் என்றும் நித்தி ஆயோக் கூறியுள்ளது. வரும் 5 ஆண்டுகளில் 12 பிரிவுகளின் கீழ் இத்திட்டத்தை முன்னெடுத்து 16 லட்சத்து 72 ஆயிரம் கோடி ரூபாய் திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நித்தி ஆயோக்கின் அறிக்கை கூறியுள்ளது.